# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2059 - 2018 පෙබරවාරි මස 16 වැනි සිකුරාදා - 2018.02.16

*2059 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | 24 |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 24 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | | |


**கவனிக்க.-** நீதித்துறை (திருத்தம்) சட்டமூலம் 2018, பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2018, மாச்சு மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால்மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

23-B81252-353(2018/02)

# நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல்

## *107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்*

*குருநாகல் நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் நொத்தாரிசாக கடமையாற்றிய திரு. ரத்நாயக்க முதியன்சேலாகே குணசேகர அவர்கள் 2017.03.31 ஆந் திகதி தொடக்கம் கடமையில் இருந்து கேட்டு விலகல் உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கின்றேன்.*

*நீல் டீ அல்விஸ்,*
*செயலாளர்,*
*உள்நாட்டலுவல்கள் அமைச்சு.*

கொழும்பு 7,
*2017, திசெம்பர் 14.*

*2-471*

# நானாவித அறிவித்தல்கள்

### மேல் மாகாண மேல் நீதிமன்றம் (கொழும்பில் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்)

*வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா தனியார் நிறுவனம் ''எயர்லைன் சென்றர்'' பண்டாரநாயக்க சர்வதேச ஆகாய விமான நிலையம் கட்டுநாயக்க விடயம் தொடர்பானது.*

*வழக்கு எண் : 4/2018/CO*

*அத்துடன்*

*முடித்துவிடும் விண்ணப்பம் கம்பனிகள் சட்டத்தின் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கத்தின் பகுதி XII இன் கீழ் வரையறுக் கப்பட்ட மிஹின் லங்கா தனியார் நிறுவனம் என்பது இலங்கையில் பதிவுசெய்யப்பட்டு செயல்படும் அலுவலகம் ''எயார்லைன் சென்றர்'' பண்டாரநாயக்க சர்வதேச ஆகாய விமான நிலையம் கட்டுநாயக்கவில் அமைந் துள்ளது.*

*மனுதாரர்*

*மேற்படி பெயரையுடைய கம்பனியை மூடிவிடுவதென்று மனுதாரர் கொழும்பில் இயங்கும் மேல் மாகாண மேல் நீதிமன்றத்திற்கு 2018, சனவரி 15 ஆந் திகதி அறிவித்துள்ளதுடன் அது ஒரு சிவில் அதிகார வழக்காகும் என்றும் மேற்குறிப்பிட்ட மனுதாரர் தெரிவித்துள்ளார். அத்துடன் அம்மனுதாரர் இவ்விடயம் 2018, மாச்சு மாதம் 19 ஆந் திகதி விசாரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக நலன் பெறுபவர் அல்லது கம்பனிக்காக பங்களிப்புச் செய்ய விரும்புபவர்கள் ஆதரவாகவோ அல்லது எதிராகவோ இம்மனுவிற்காக மன்றிற்கு வந்து இவ்விடயம் எடுக்கப்படும் போது சமுகம் தந்து கருத்துத் தெரிவிப்பதற்கு தமது ஆலோசனைகளுடன் சமர்ப்பிப்பதற்கு பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிகள் மூலம் இவ்விடயம் தொடர்பாக கோருமிடத்து அம்முறைப்பாட்டின் பிரதிகள் சம்பந்தப்பட்ட நலன்விரும்பிகள் பங்களிப்புச் செய்ய விரும்புபவர்கள் கீழ் கையொப்பமிட்டுள்ள மனுதாரர்களின் கட்டணங்களைச் செலுத்தி மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக பிரதியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.*

*சிறிமல் வீரக்கொடி,*
*மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி,*
*இல. 494/2B, என். டி. பெரேரா மாவத்தை, அங்கொடை.*

**குறிப்பு.-** *எவரொருவர் மேற்குறிப்பிட்ட விண்ணப்பம் தொடர்பாக அவர் நீதிமன்றத்தில் விசாரிக்கும் போது சமுகம் தர விரும்பின் மனுதாரருக்கு அதுபற்றிக் கட்டாயம் அன்றைய தினம் அவரது அக்கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிக்கு எழுத்துமூலம் அறியத்தரவேண்டும். அவ்வறிவித்தலில் அவரது பெயர், விலாசம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் அல்லது கம்பனியில் அதன் பொறுப்பில் உரியவராக இருந்தால் அத்துடன் அது அங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது தபாலில் அனுப்பப்பட்டிருப்பின் அது அன்று ஒரு மணிக்கு முன்பு நேரகாலத்துடன் கிடைக்கப்பெற்றிருக்க வேண்டும். ஒரு மணிக்குப் பின்னர் மாலை நேரம் என்பது (பி. ப. 01) 2018, மாச்சு 17 ஆந் திகதியாகும்.*

*2-571*